<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

Calender : CC No.323 /2025
Miscellaneous :
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பழனி கவுண்டர் | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 12.11.2025.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது ஈரோடு மாவட்டம் கோபி செட்டிபாளையம் தாலுக்கா வரப்பாளையம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 06.01.2025 ம் தேதி உடுமலை காவல் நிலையத்தில் நான் நிலைய நிலைய அலுவலில் இருந்த போது நேரில் ஆஜரான கணபதி பாளையம் வசிக்கும் மருதவாணம் த/பெ.வேலாயுதம் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 11/2025 ச/பி. 331(3), 331(4), 305(a) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை கனம் நீதிமன்றத்திற்கும் மற்றொரு நகலை புலன் விசாணைக்காக நான் எடுத்து கொண்டேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.6 என குறியீடு செய்யப்படுகிறது.**
2. பின்னர் சம்பவ இடம் சென்று அன்றைய தினம்14.30 மணிக்கு சாட்சிகள் ராமசாமி மற்றும் சதிஸ்குமார் முன்னிலையில் மாதிரி

வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம் அசா.ஆ .7 என்றும், குறியீடு செய்யப்டுகிறது.** பின்னர் சாட்சிகள் மருதவாணன், தனலட்சுமி, பிரபு, பிரபாகரன், ராமசாமி, ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கு பாரி குற்ற வழக்கு என்பதால் எதிரிகளை கண்டறியவும் பழங்குற்றவாளிகளை தணிக்கை செய்யவும் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன் . காவல் ஆயவாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும் முதற் கட்ட புலன் விசாரணை அதிகாரியும் நீங்கள் தான் என்றால் சரிதான். வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் எப்போது புலன் விசாரணைக்காக எடுத்து கொண்டார் என்றால் 10.04.2025 ம் தேதி . உடுமலைப்பேட்டையை காவல் நிலையத்தில் பணிபுரிந்த காலத்தில் எத்தனை காவலர்கள் பணியில் இருந்தார்கள் என்றால் பணி மாறுதல் ஆகிவிட்டு சென்றிருந்தார்கள், அயல் பணிகளிலும் இருப்பார்கள் அப்போது சுமார் 79– 80 வரை இருந்தார்கள் . முதல் தகவல் அறிக்கை தட்டச்சு செய்யப்பட்ட நிலையில் உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல்அறிக்கையை நீங்கள் தட்டச்சு செய்யவில்லை என்றால அதற்காக தனியாக பிரத்தியேக காவலர்கள் உள்ளார்கள். முதல் தகவல் அறிக்கையில் காலம் 3 சி ல் ஜிடி என்ட்ரி நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான். புகாரில் காணாமல் போனதாக சொல்லப்படும் நகைககளின் மாடல்கள் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.
2. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் உள்ள தூரம் எவ்வளவு என்றால் 4 கி. மீ தூரம். உடனடியாக தகவல் வரவில்லை என்றால் ஆமாம். இந்த வீட்டின் கதவை உடைத்து செய்வது ஒரு நபரால் செய்ய இயலாது என்றால் செய்யலாம், ராடு வைத்து ஒரு நபரால் செய்ய இயலும். வழக்கின் சாட்சிகள் அவர்களின் வீட்டு கதவை ஒரு நபரால் உடைக்க இயலாது என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கு பொறுத்த வரை கைரேகை நிபுணர்களை வைத்து ஆய்வு செய்யவில்லை என்றால் ஆய்வு செய்துள்ளோம். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் Suspected கைரேகை கிடைக்காததால் அறிக்கை கொடுக்கவில்லை, தொடர் கண்காணிப்பில் வைத்திருப்பார்கள்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதியில் சிசிடிவி கேமரா பதிவுகள் உள்ள பகுதி என்றால் அப்போது அந்த பகுதியில் இல்லை, பக்கத்தில் 200 மீ துூரத்தில் பெட்டிக்கடையில் சிசிடிவி கேமரா உள்ளது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நிறைய வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது.
4. முதல் தகவல் அறிக்கையில் இறுதி பக்கத்தில் உள்ள உங்களது கையெழுத்து கையெழுத்தும் புகாரில் இறுதி பகுதியில் உள்ள கையெழுத்தும் மாறுபட்டுள்ளது என்றால் எனது கையெழுத்துக்கள் தான். பார்வை மகசரில் உள்ள கையெழுத்தும் புகாரில் இறுதி பக்கத்தில் உள்ள வாசகங்களின் கையெழுத்தும் மாறபட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் தான் எழுதினேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த போது காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. புகார் கொடுத்த தேதியை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் கையெழுத்து கீழ் தேதி போட்டுள்ளார். வழக்கில் பணம் காணாமல் போனதாக சொல்லியுள்ள நிலையில் பணத்தின் டிமானினேசன் பற்றி சொல்லவில்லை என்றால் ஆமாம் .
5. முதல் தகவல் அறிக்கை காவல் ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க பதிவு செய்திர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தவிர குற்ற எண்கள் 41/2025 ,146/2025, 182/2025,, 94/2025, 42/2025, 191/2025, 187/2025 ஆகியவைகளிலும் முதல் தகவல் அறிக்கை நீங்கள் தான் பதிவு செய்திர்கள் என்றால் சரிதான் நான் குற்ற பிரிவில் காவல் உதவி ஆய்வாளர் என்பதால் அனைத்து குற்ற வழக்குகளிலும் நான் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அனைத்து வழக்குகளிலும் நீங்கள் தான் முதல் தகவல் அறிக்கை தயார் செய்ய வேண்டும் என்று சட்டம் இல்லை என்றால் இல்லை.
6. புகார் கொடுத்த பின்னிட்டு முதல் தகவல்அறிக்கை தயார் செய்ய எவ்வளவு நேரம் ஆகும் என்றால சுமார் ½ –1.00 மணி நேரம் ஆகும் . முதல் தகவல் அறிக்கை தயார் செய்ய ஒப்புதல் பெற வேண்டுமா என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றாலும் சாட்சிகள் கையிருப்பு சாட்சிகள் என்றாலும் சரியல்ல.
7. நீங்கள் விசாரித்த சாட்சிகள் 06.01.2025 ம் தேதிக்கு பின்னிட்டு இந்த வழக்கில் எந்த நடவடிக்கை எடுத்ததாக ஆவணங்கள் இல்லை என்றால் எதிரிகள் தேடி வந்தோம். உங்களை காவல் ஆய்வாளர்

விசாரித்ததாக 180(3) BNSS வாக்குமூலம் இல்லை என்றால் முதல் கட்ட புலன் விசாரணை அதிகாரி என்பதால் தேவையில்லை.

8. வழக்கு சம்பந்தமாக தனியறிக்கை காவல் ஆய்வாளர் வசம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக உள்ளூர் நபர் வெளியூர் செல்வது விவரம் பக்கத்து வீட்டுக்காரர் தான் தெரியும் என்றாலும் குற்ற சம்பவத்தில் 1 க்கு மேற்பட்ட நபர்கள் ஈடுபட்டதாக தெரிகிற நிலையில் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.